பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
The EELANADU

மலர் 19 கார்த்திகை 8 ஜுஹஜ் 11 இதழ் 283
யாழ்ப்பாணம் புதன்கிழமை 23-11-77

லாலா தயாரிப்பு

புதிய முறையில் லாலா தயாரிக்கப்பட்டு இலங்கை முழுவதிலும் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.. லாலா நீலசோப்பை வாங்கி உபயோகித்து அதன் தரத்தை தெரிந்து கொள்ளுங்கள்.
லாலா சோப் தொழிற்சாலை
— அச்சுவேலி —

## 10,000 பேர் பலியானார்கள்!

ஹைதராபாத், நவ. 22
ஆந்திரப் பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை வீசிய கோரப் புயலுக்கு 10,000 பேர் பலியாகிவிட்டதாக ஆந்திரப் பிரதேச முதலமைச்சர் திரு. ரங்கல்ராவ் இன்று அறிவித்தார். பாதிக்கப்பட்ட சகல பகுதிகளையும் ராஷ்டிரபதி திரு. என். சஞ்சீவரெட்டி நாளை ஹெலிகாப்டரில் பார்வையிடுவார்.
புயலின் கோரப் பார்வை கேரளத்தின் மீது நேற்றுத் திரும்பியது. ஏழு கோடி ரூபா சேதமேற்பட்டுள்ளதுடன் எட்டுக் கப்பல்களும் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

# பதுக்கல் வியாபாரிகள்மீது கடுமையான நடவடிக்கை!

## பிரதமர் ஜே.ஆர். உத்தரவு

### இன்று முதல் அமுலாகிறது; மீறினால் 'லைசென்ஸ்' ரத்தாகும்

(கொழும்பு)
கொள்ளை லாபம் மற்றும் பதுக்கல் வியாபாரிகள் மீது கடுமையான- உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு பிரதமர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளையும், பொலிஸ் மா அதிபதியையும் இன்று பணித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டம் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து முக்கியமான பாவனைப் பொருள்களும் மற்றும் உணவுப் பொருள்களும் பதுக்கிவைக்கப் படுவதாகவும், இப்பொருள்கள்மீது கொள்ளை லாபம்பெற வியாபாரிகள் முயற்சிப்பதாகவும் கிடைக்கப் பெற்ற புகார்களைத் தொடர்ந்தே பிரதமர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா மேற்படி நடவடிக்கையை எடுத்துள்ளார்.

#### முக்கியமான பொருள்கள்

முக்கியமான சில பொருள்களின் கட்டுப்பாட்டு விலையை அரசாங்கம் ரத்துச்செய்து விட்டபோதிலும், இப்பொருள்களுக்குச் செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்த வர்த்தகர்

(6-ம் பக்கம் பார்க்க)

பங்கீட்டுப் பொருள் விநியோகம்:

## "சம்பள உச்சவரம்பை 500 ரூபா ஆக்குக"

[யாழ்ப்பாணம்]
வரவு-செலவு திட்டத்தில் 300 ரூபாவிற்கு மேல் வருமானம் உள்ளவர்களின் பங்கீட்டுப்பொருட்களை நிறுத்தினால் பலர் கஷ்டமடைய நேரிடுமென்பதால் இதன் உச்சவரம்பை 500 ரூபாவாக அதிகரிக்குமாறு அரசைக் கோரும் தீர்மானம் தமிழ்நாடு ஜி. ஜி. காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் நிறைவேறியது.
தோண்டாவிலுள்ள தலைமைக் காரியாலயத்தில் திரு. ஆர். என். சிவப்பிரகாசம் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது
அரசு 22 மாவட்டங்களை 27 மாவட்டங்களாக அதிகரிக்க உத்தேசித்திருப்பதை 29 மாவட்டங்களாக அதிகரிக்கவேண்டும் என்றும் வெளிநாடு செல்லும் விமானப் பிரயாணிகளில் வடபகுதியைச் சேர்ந்தவர்களின் வசதிக்காக ஒரு மாதத்தில் 4 தடவையாவது பலாலிவிமான நிலையத்திலிருந்து வெளிநாட்டு விமானங்கள் புறப்படவும், வந்து சேரவும் ஒழுங்குசெய்ய வேண்டுமென்றும் அரசைக் கோரும் தீர்மானங்களும் நிறைவேறின.
அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின்முதலாவது சிராத்த தினத்தையொட்டிய நிகழ்ச்சிகளைத் தயாரிக்க ஐவர் குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது. (க-அ)

## கலைஞரை விடுதலை செய்ய அண்ணா பொதுப்பணிக் கழகம் எம். ஜி. ஆருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)
தமிழகத் தி. மு. க. தலைவரும், முன்னால் முதல்வரும் சட்டசபை எதிர்க்கட்சித் தலைவருமான கலைஞர் மு. கருணாநிதியையும், மற்றும் 28 தி. மு. க. பிரமுகர்களையும் உடன் விடுதலைசெய்யக்கோரும் மகஜர் ஒன்றை தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனுக்கு அந்தரோடை அண்ணாபொதுப் பணிக் கழகம் அனுப்பிவைத்துள்ளது.
கலைஞரையும், தொண்டர்களையும் விடுதலைசெய்வதின் மூலம் தமிழகத்தில் நிரந்தர அமைதியையும் ஈழத்தமிழ்மக்களிடையே நிரந்தர நிம்மதியையும் ஏற்படுத்துமாறு இம் மகஜரில் மேலும் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.
இம் மகஜரின் பிரதிகள் இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய்க்கும், இந்தியத் தூதுவர் திரு. குர்பக்சான் சிங்கிற்கும் மேற்படி கழகப் பொதுச்செயலாளர் திரு. சி. ஆ. கருணாநிதியினால் அனுப்பிவைக்கப் பட்டுள்ளதுடன் இதுவிஷயமாக இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்திடமும் கழகத் தூதுக்கோஷ்டி சென்று இதில் தலையிடுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது. (கா-அ)

கலைஞர் கருணாநிதி பொதுப்பணிமன்றம்

## எம். ஜி. ஆரை ராஜினாமா செய்யக் கோரி மகஜர்

(கொழும்பு)
திருமதி இந்திரா காந்தி தமிழ்நாட்டுக்கு வருகைதந்த போது அறவழியில் எதிர்ப்புத் தெரிவித்த தமிழக முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி உட்பட திராவிடமுன்னேற்றக் கழகத்தலைவர்களையும் கழகத் தொண்டர்களையும் தமிழக அரசு கைதுசெய்ததை ஆட்சேபித்து கைதுசெய்யப்பட்டோரை உடனடியாக விடுதலைசெய்யுமாறும், இந்திரா அரசுக்குத் துணைநின்ற தமிழக அரசையும் முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரனையும் இராஜினாமாச்செய்யுமாறும் இந்திய பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய்க்கு எழுதப்பட்ட மகஜரை இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவரிடம் கலைஞர் கருணாநிதி பொதுப்பணி மன்றம் கையளித்தது.

## ரூ. 300 சம்பள நிர்ணயம்

### ஆலோசிக்கப்படும் என்கிறார் 'றெனி'

[கொழும்பு]
மாதம் 300 ரூபாவுக்கு கூடுதலாகச் சம்பளம் பெறுவோரினது இலவச அரிசியை ரத்துச்செய்யும் திட்டத்தை உடனடியாக மாற்றமுடியாது. இத் திட்டத்தை அரசாங்க பாராளுமன்ற அங்கத்தவர்கள் அனைவரும் பாராட்டி, வரவேற்றுள்ளனர். இத்திட்டத்துக்கு மக்கள்மத்தியில் எதிர்ப்பு உருவாகி மாற்றிஅமைக்கத்தான் வேண்டும் என்றநிலைமை உருவாகுமானால் அதுபற்றி ஆலோசிக்கப்படும்"
இவ்வாறு நிதியமைச்சர் திரு. றெனி டி மெல் நேற்று நடைபெற்ற பத்திரிகைநிருபர்கள் மகாநாட்டில் பேசுகையில் விளக்கினார்.
புதிய வரவுசெலவுத்திட்டத்தின் முழுப் பெறுபேறுகளையும் அனுபவிப்பதற்கு ஆறுமாதத்திலிருந்து ஒரு வருடம் வரை செல்லும் என்று நிதியமைச்சர் திரு. றெனி டி மெல் தெரிவித்துள்ளார்.
நாட்டின் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்த பட்ஜட்டை முற்றாக அமுல்செய்யும் இடையூறுகள் ஏற்படத்தான்செய்யும் என்றும் தெரிவித்த மெல் மேலும் கூறியதாவது:
வரவுசெலவுத்திட்டம் அமுல் செய்யப்படும்போது அவ்வப்

[5-ம பக்கம பார்க்க]

## பேரவை கூடுகிறது

[கொழும்பு]
தேசிய அரசுப் பேரவை இன்று காலை மீண்டும் கூடும். வரவு செலவுத் திட்டம் மீது தொடர்ந்து விவாதம் நடைபெறும்.

## இளைஞர் கைது

[யாழ்ப்பாணம்]
கோண்டாவில் தபால்நிலையக் கொள்ளை, கொக்குவில் ரயில்நிலையக் கொள்ளை மற்றும் சில கிராம வங்கிக் கொள்ளைகள் தொடர்பாகச் சந்தேகத்தின் மீது நவாலியைச் சேர்ந்த இரத்தினசிங்கம் என்னும் இளைஞர் நேற்று யாழ். பொலிசாரால் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

## 200 அகதிக் குடும்பங்கள் விஸ்வமடுவில் குடியேற்றம்

[யாழ்ப்பாணம்]
அண்மையில் நாட்டில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களை அடுத்து இடம்பெயர்ந்து வடபகுதி முகாம்களில் தஞ்சமடைந்திருந்த அகதிகளில் இலங்கைப் பிரஜா உரிமை பெற்ற 200க்கு மேற்பட்ட குடும்பங்கள் இம்மாத முடிவுக்குள்குடியேற்றப்படவுள்ளனர்.
9க்கு மேற்பட்ட முகாம்களில் தங்கியிருந்தவர்களில் இலங்கைப் பிரஜா உரிமை பெற்ற மக்களை விஸ்வமடுவில் 450 ஏக்கர் நிலத்தில் குடியமர்த்த அரசு தீர்மானித்துள்ளது. இக்குடியேற்றம் கிராம அபிவிருத்தித் திட்டத்தின் அடிப்படையிலேயே நிறுவப்படவுள்ளது. இப்புதிய குடியேற்றப்பகுதியில் குடியமர்த்தப்படும் மக்களுக்கு அரசு வழங்கும் உதவிகள் தவிர்ந்த பிறஉதவிகளை தமிழர் புனர்வாழ்வுச் சபை அளிக்கமுன் வந்துள்ளது.
இதுஇவ்வாறிருக்க அரசினால் வழங்கப்பட்ட நிலங்களில் குடியேற உரிமையற்ற இலங்கைப் பிரஜாவுரிமையற்ற பெரும்பாலான அகதிக்குடும்பங்களையும் வடபகுதியிலும், பிறஇடங்களிலும் தமிழர் புனர்வாழ்வுச்சபை குடியேற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது. (கெ-அ)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

Dr. பொன்னம்பலம் பரமசுவாமி காரைநகர் மேற்கு
தற்பொழுது 66 காம்பெல் பிளேஸ் கொழும்பு
—வழக்காளி

வழ. இல. M. B. 12510 எதிராக
செல்லத்துரை குமரகுரு வல்வெட்டிதுறை —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் MB/12510ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னை விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகள் 1977ம் ஆண்டு மார்கழி மீ 19-ம் திகதி (19-12-77) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபாய் 58015/ம் 20-5-71 தொடக்கம் 28-1-72 வரைக்கும் ரூபா 40000/-க்கு 15வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீத வட்டியும் கோட்டில கட்டப்பட்டது 11-8-68ல் ரூ. 1200/- 19-11 71ல் 5000/- 19-6-73ல் 15000/- 17-5-76ல் 5000/- 16 7-76ல் 5000/-

### ஆதன விபரம்

1935 ஆண்டு பங்குனி மீ 21ம் திகதி உத்தரவுபெற்ற அளவையாளர் அலோசியஸ்ஸால் 121ம் படத்தில் துண்டு ஒன்றில் நிர ஒன்றும் குளி ஒன்று ஒன்பதில் பதினாறும் (நிர 1 குளி 1, 9/16) தாங்கும் மதிப்பிலக்கங்கள் 22, 24, 26 பிரதான தெருவிலும் 51 முதலாம் குறுக்கு தெருவிலும் (பழையது) புதிய மதிப்பிலக்கம் தாங்கியிருக்கும் புதிய நம்பர்கள் 40, 46 பிரதான தெருவில் மேல் வீட்டு கட்டிடங்களும் கிணறும் தெற்கெல்லை சுவரில் வீடுகளுக்கு வெளியில் உள்ள அதற்கு சேர்ந்தவை மற்ற எல்லாத்திலும் பின் கதவிலும் கிணற்றிலும் பயிர்களிலும் மற்ற எல்லா பயிர்களிலும் அரைவாசி பங்கும். வடமாகாணம் யாழ் டிஸ்திறிக் யாழ். பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று யாழ் பட்டினம் 2ம் பிரிவு இறை துண்டு ஒண்டு எல்லை கிழக்கு C. முத்துக்குமாரு பெண் சிசிலியாவின் உரிமைக்காரரின் ஆதனம், வடக்கு பிரதான தெரு மேற்கு முதலாம் குறுக்குத் தெரு, தெற்கு சொல்லப்பட்ட துண்டு இரண்டு A. A. மாதருக்கும் உடையது தற்பொழுது K. சங்கரபபிள்ளைக்குடையது ஆனால் 1963 ஆண்டு கார்த்திகை மீ 14ம் திகதி உத்தரவுபெற்ற அளவையாளர் C. C. குமாரசாமி தயாரித்த 447 படத்தின்படி நிர ஒன்று குளி ஒன்று தசம் எட்டு ஆறு (நிர 1 குளி 1.86) யாழ்ப்பாணம் பதிவு இல. D 202/142 இதடங்கலிற் சொரியலாய் அரைவாசி.

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை மேற்கு சோனகன்தறை நிர இரண்டரை (நிர 2½) சாலையும் கட்டிடங்களும் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும் தொங்கவிருக்கும் மதிப்பிலக்கம் 34 பளசும் புதிய மதிப்பிலக்கம் 108, 110, 112, 114 புன்னாலை றோட்டு யாழ். மாநகர சபை எல்லைக்குள் எல்லை கிழக்கு K. சுந்தரத்தின் ஆதனம், வடக்கு வண்ணை கதிரேசன் கோவிலாதனம், மேற்கு வண்ணை கதிரேசன் கோவிலாதனம், தெற்கு றோட்டு. ஆனால் 1963ம் ஆண்டு கார்த்திகை மீ 14ம் திகதி உத்தரவுபெற்ற அளவையாளர் C. C. குமாரசாமி தயாரித்த 448ம் படத்தின்படி (நிர 2 குளி 11.79) நிர இரண்டு குளி பதினொன்று தசம் ஏழு ஒன்பது இதடங்கலில் சொரியலாக நாவில் ஒன்று யாழ் பதிவு இல. D 229/115

'வேல்பதி' S. சங்கரப்பிள்ளை J. P.
புத்தூர். கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
7-11-77 7739

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

வழ. இல. / ஈடு / 14424
அந்தோனிப்பிள்ளை கிறிஸ்தியாம்பிள்ளை, கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறை.
வாதி

எதிராக

1. ஆறுமுகம் திருநாவுக்கரசு, பெண்
2. கண்ணம்மா புளியங்கூடல், ஊர்காவற்றுறை.
3. மாணிக்கம் தவயோகராசா, சுருவில், ஊர்காவற்றுறை
4. யோக்கிம்பிள்ளை யாக்கோப்பு நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை.

—பிரதிவாதிகள்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் M. B. 14424 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப் படி, பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணியை 1977 ம் ஆண்டு மார்கழி மாதம் 16 ந் திகதி (16-12-1977) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபாய் 8280/ம்-, மேலும் 5000/- ரூபாவுக்கு வருடம் ஒன்றுக்கு நூற்றுக்கு 15% வட்டியும் வழக்கு அணைத்த திகதியாகிய 1974 ம் ஆண்டு ஆனி மாதம் 19 ம் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1975 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 23 ம் திகதிவரையுமான வட்டியும், அதன் பின்னர் தீர்வை முழுத் தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5% வட்டியும் வழக்கு செலவு ரூபா 685-45 இதில் நடைபெற்ற செலவு ரூபா 436-35 நடைபெறவேண்டிய செலவு ரூபா 138-85 மேலதிக சமயா சமயச் செலவு ரூபா 110-25 கொடுக்கவேண்டியிருப்பதாலும்.

### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறை கோவிற்பற்று சரவணை இறை 'ஐமிளந்தனை வயல்' நெ. பர. 33. இதில் இரு துண்டுகள் நீக்கி மிகுதியான நெ பர, 13, குளி 3 1/2, இதற்கெல்லை கிழக்கு; மாணிக்கம் கைம்பெண் யோகம்மாவினுதனம் மேற்கு:- கணபதிப்பிள்ளை முருகேசுக்குரிய இதன் முன் நீக்கப்பட்ட ஆதனம். வடக்கு வீதி, தெற்கு;- முருகேசு பெண் இராசம்மாவுக்குரிய ஆதனம் இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்.

2 மேற்படி இறை 'உப்பன்' நெ. பர. 7, 1/16 கல் வீடும் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும், இதற்கெல்லை கிழக்கு;- குமரவேலு பெண் மகேஸ்வரியினுதனம், வடக்கும் மேற்கும் ஒழுங்கை, தெற்கு: குழந்தைவேலு செல்லத்துரைக்கும் அம்பலவாணர் பெண் பார்வதிக்கும் உரியவாதனங்கள்

ஏ. ப. பி. எதிர்மன்னசிங்கி
107, மெயின்ஸ்றீட், வெந்திஸ்/கொமிஷனரும்
யாழ்ப்பாணம். விலைமதிப்பாளரும்
27-9-77. 7744

இ. பாலசுப்பிரமணியம்,'
சட்டத்தரணி'
52, வைமன் வீதி
யாழ்ப்பாணம்.

## 1973 ம் ஆண்டின் 44 ம் இலக்க நீதிநிருவாகச் சட்டத்தின் 283 ம் பிரிவின் கீழ் இடைக் காலக் கட்டளை

இலங்கைக் குடியரசின் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்

கொக்குவில், கொக்குவில் மேற்கு, 'கலாபவனம்' என்னும் இடத்திலிருந்து காலஞ்சென்ற ஏரம்பு சுப்பையா என்பவரின் ஆதனங்களும் மற்றும் பெறுமதிகளும் சம்பந்தப்பட்டவை.

காலஞ்சென்றவர்.

வலயம்: யாழ்ப்பாணம்
இல: 375

கொக்குவில், கொக்குவில் மேற்கு, 'கலாபவனம்' என்னும் இடத்தில் வசிக்கும் ஏரம்பு சுப்பையா பெண் பூரணம்.

விண்ணப்பதாரர்

கொக்குவில், கொக்குவில் மேற்கு, 'கலாபவனம்' என்னும் இடத்தில் வசிக்கும்

1. சபாரத்தினம் சிவனேசன்,
2. பெண் சாந்தினி,
3. சுப்பையா சௌதாமினி (பராயமற்றவர்கள்)
4. சுப்பையா கிருபனந்தன்
5. சுப்பையா உமாசங்கர்
6. சுப்பையா கிருத்திகாயினி
7. சுப்பையா குமுதினி
8. சுப்பையா உதயசங்கர்
9. சுப்பையா கோபி சங்கர்

3—9 வரையுள்ள பிரதிவாதிகள் தமது பாதுகாவலர்

10. கொக்குவிலில் வசிக்கும் இளையதம்பி கந்தையா சுப்பையா மூலம் தோன்றுகிறார்கள்.

பிரதிவாதிகள்

20-6-1977-ந் திகதியைக் கொண்ட 2[illegible]-ம் பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் உறுதிக்கூற்றுக்கள் பார்த்தமாத்திரத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளதென திருப்தியடைந்ததின்பேரில் யாழ்ப்பாண நீதிபரிபாலன தத்துவப்பத்திர அதிகாரி கா. கணபதிப்பிள்ளை ஆகிய நான் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் பேரில்

(அ) 1977-ம்ஆண்டுஆகஸ்ட் மாதம் 19-ந் திகதிக்கு அல்லது அதற்கு முன்பதாக எவராவது ஆட்சேபம் தெரிவித்தாலன்றி மேற்சொல்லப்பட்ட காலஞ்சென்றவர் விட்டுச்சென்ற மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்களுக்கும் மற்றும் பெறுமதிகளுக்கும் நிருவாகத் தத்துவப்பத்திரம் பெறுவதற்கு மேற்சொல்லப்பட்ட விண்ணப்பகாரரே காலஞ்சென்றவரின் கைம்பெண் என்றவகையில் உரித்துடையவர் என்றும் அவ்வண்ணமே அவருக்கு நிருவாகத் தத்துவப்பத்திரம் வழங்கப்படுகிறதென்றும்;

(ஆ) மேலும் இம்மரணச் சொத்துநடவடிக்கை சார்பாக மேலே சொல்லப்பட்ட 10-ம் பிரதிவாதியை பராயமற்றவர்களாகிய 3-9 வரையுள்ள பிரதிவாதிகளுக்குப் பாதுகாவலராகவும் நியமிக்கப்படுகிறதென்றும் இத்தால் கட்டளையிடுகிறேன்.

1977 ம் ஆண்டு யூன் மாதம் 20 ந் திகதி.

ஒப்பம்
கா. கணபதிப்பிள்ளை
தத்துவப்பத்திர அதிகாரி

14-10-77
காரணங்காட்டுந் திகதி 24-11-77 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஒப்பம்
கா. கணபதிப்பிள்ளை,
தத்துவப்பத்திர அதிகாரி.
7749

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## விதைகிழங்கு வந்தது

(யாழ்ப்பாணம்)

விதை உருளைக்கிழங்கு யாழ்ப்பாண மாவட்டத்திற்குப் பெருமளவில் வந்து சேர்ந்துள்ளது. விதைஉருளைக் கிழங்குகளை ஏற்றிய வாறு பல லொறிகள் கடந்தசனி ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தன. பதிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு யாழ் செயலகத்தின் மூலம் இக்கிழங்குகள் வழங்கப்படும் (கி-அ)

## இ.ஆ.சங்கம் 27-ந் திகதி கூடி ஆராயும்

[யாழ்ப்பாணம்]

இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் 2-வது ஆண்டுக் கூட்டம் இம்மாதம் 27-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டத்தில் கடந்த காலத் தோட்டப்பாடசாலைச் சேவையை பென்சனுக்குச் சேர்ப்பதுபற்றி புதியகோணத்தில் செய்து முடிப்பது பற்றியும் சுவீகரிக்கப்பட்ட தோட்டப் பாடசாலைகள் ஆசிரியர் பிரச்னை பற்றிஆராயவும்.

ஆசிரியர் பயிற்சி பெறுவோரை வெளிமாவட்டங்களிலுள்ள பாடசாலைகளுக்கு நியமித்தல் பற்றியும் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்படும் என சங்கச்செயலாளர் திரு. இ. சுப்பிரமணியம் தெரிவித்தார். (கா)

## வரி விளம்பரம்

### தேவை

நெசவு நெய்தலில் அனுபவமுள்ள பெண்கள் தேவை. இருப்பிட வசதியுண்டு விபரங்களுக்கு: ந. கந்தசாமி, சிவா கைத்தறிநிலையம், மண்டதினி ஒழுங்கை, கொக்குவில் மேற்கு. 7729

அனுபவமுள்ள சமையல்காரர் தேவை. நேரில் வரவும். அதிகாரி, இணுவில் ஆஸ்பத்திரி, இணுவில். 7753

13 வயதுக்கு மேற்பட்ட வேலை பழகுநர்கள் (ஆண்கள்) கண்ணாடித் தொழிற்சாலைக்கு உடனடியாகத் தேவை. வேலை பழகும்பொழுதும் வேதனம் கொடுக்கப்படும். நேரில் வரவும். 25, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 7742

### SERVICE

Piano-major and miner repairs, tunning undertaken by experienced & qualified technicia s contact Vim's, 14, Clocktower Road Jaffna. 7703

PROMOTERS
ENGINEERING
Company Ltd
844, Point Pedro Road,
Nallur Jaffna.

எமது ஸ்தாபனத்தின் விஸ்தரிப்புக்காக ஒரு உற்பத்தி முகாமையாளர் [PRODUCTION MANAGER] தேவை. இவர் வாகனத் தொழில் நுட்பத்துறையில் அனுபவம் வாய்ந்தவராயும் நிர்வாகப் பொறுப்பில் திறமை உள்ளவராகவும் இருக்க வேண்டும்.

தொடர்பு-
பிரதம இயக்குநர்.

7751

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் வழக்கு இல: ஈடு/14935

விஞசித்தம்பி சின்னத்துரை, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.
வாதி.

எதிராக

1. கண்மணி இராமலிங்கமும்
2. பெண் யோகம்மாவும் 111/2, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். பிரதிவாதிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் ஈடு/14935-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிசகப்படும் ஒரு துண்டுக் காணியை 1977-ம் ஆண்டு 20-ந் திகதி டிசம்பர் மாதம் (20-12-77) செவ்வாய்க்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- ரூபா 7,094/-ம் 10-7-75 தொடக்கம் 2-11-76 வரைக்கும் ரூபா 5000/-க்கு 14 வித வட்டியும், அதன் பின் தீர்வை முழுத்தொகைக்கும் 5 வித வட்டியும், வழக்குச் செலவு ரூபா 664/70 சதமும்.

### ஆதன விபரம்

வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக், நல்லூர்க் கோவிற்பற்று, நல்லூர் இறை ''தவசி வெளி'' நிலப்பரப்பு 5 குளி 3 1/2. இதில் தெற்குப்புறமாக நிலப்பரப்பு 3. இதில் கிழக்குப்புறமாக பாதைக்காக விடப்பட்ட 2 குளி நீக்கி மிகுதி நி. ப. 2 குளி 16 இந்த நி. ப 2 குளி 16ம், கல்வீடும், கிணறும், பயிர்வகைகளும். எல்லை கிழக்கு: பொது ஒழுங்கை, வடக்கு: செல்லர் நடராசாவுக்குரிய மிகுதி ஆதனம், மேற்கு: ஆறு அடி கையொழுங்கை, தெற்கு: ஒழுங்கை. இதடங்கலும். இன்னும் கிழக்கேயுள்ள பொது ஒழுங்கையில் இதற்குரிய பங்கும்.

செ. பாண்டித்துரை,
மல்லாகம், கொமிஷனர், விலைமதிப்பாளர்.
14-11-77. 7743

# எகிப்து இஸ்ரேல் யுத்தம் இனிமேல் என்றுமே நடைபெறமாட்டாது

## இருநாட்டுத்தலைவர்களும்ஜெருஸலத்தில்உறுதி

ஜெருஸலம், நவ. 22

எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையே இனி என்றுமே யுத்தம் இருக்கமாட்டாது என்று இஸ்ரேலியப் பிரதமர் திரு பெகினும் 1973-ம் ஆண்டு நடைபெற்ற இஸ்ரேல்—எகிப்து யுத்தமே கடைசி யுத்தமாக இருக்கும் என்று எகிப்திய அதிபர் ஜனுப் அன்வர் சதாத்தும் தெரிவித்துள்ளனர். ஜனுப் சதாத்தின் இஸ்ரேலிய விஜயத்தின் இறுதிக்கட்டத்தில் சுமார் 3 ஆயிரம் பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர்கள் இருவரும் மேற்கண்டவாறு கூறினர்.

### "சதாத்தின் விஜயம் முழு வெற்றி"

இதேவேளையில் ஜனுப் சதாத்தின் இஸ்ரேலிய விஜயம் நூற்றுக்குநூறு வெற்றியளித்துள்ளதாக எகிப்திய அரசியல் வட்டாரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல்-எகிப்து அமைதி பந்தோபஸ்து நடவடிக்கைகளைப் பலப்படுத்துவது குறித்து தாம் இருவரும் உறுதி பூண்டுள்ளதாகவும், மத்திய கிழக்கு சமாதானம் குறித்து ஜெனிவாமகாநாட்டை உடன் கூட்டுவதற்கு தாம் தொடர்ந்து முயற்சி எடுக்க உள்ளதாகவும் பத்திரிகையாளர் மத்தியில் ஜனுப் சதாத் தெரிவித்தார்.

## "இஸ்ரேல் பிரதமர் எகிப்துக்கு வரமாட்டார்!"

ஜனுப் சதாத் மேலும் பேசுகையில் கூறியதாவது;-

இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகின் எகிப்துக்கு வரமாட்டார். இஸ்ரேலில் இருந்துகொண்டே எகிப்து - இஸ்ரேலிய சமாதானத்துக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

### எகிப்துக்கு வர உரிமையுண்டு

எகிப்துக்கு வர திரு. பெகினுக்கு உரிமையுண்டு. ஆனல் தவிர்க்கமுடியாத சில காரணங்களினுல் திரு. பெகினின் எகிப்திய விஜயம் பின்போடப்பட்டுள்ளது.

இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகின் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில் கூறியதாவது:-

### தார்மீக வெற்றி

எகிப்தியபிரதமரின் இஸ்ரேலிய விஜயம் ஒரு தார்மீகவெற்றி. இவ்விஜயத்திஞல் இஸ்ரேலுக்கும் எகிப்துக்குமிடையே மட்டுமல்ல, இஸ்ரேலுக்கும் சகல அரபு நாடுகளுக்குமிடையே சமாதான உறவுகளை ஏற்படுத்த வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. (இ)

## மெயர் செய்திக்கு முக்கியத்துவம்

லண்டன், நவ. 22

இஸ்ரேலுக்கு விஜயம் செய்த ஜனுப் சதாத்திற்கு பென்கூரியன் விமான நிலையத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பில் முன்னுள் இஸ்ரேலியப் பிரதமர் திருமதி கோல்டா மெயர் கலந்துகொண்ட செய்தியை பிரிட்டிஷ் பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்து பிரசுரித்திருந்தன. (இ)

## நாடுதிரும்பிய சதாத்துக்கு வீர வரவேற்பு

கெய்ரோ, நவ. 22

அதிபர் சதாத் தமது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இஸ்ரேலிய விஜயத்தை முடித்துக் கொண்டு எகிப்து திரும்பிய போது அவருக்கு விமான நிலையத்தில் வீரருக்கான வரவேற்பு அளிக்கப்பட்டது.

விமான நிலையத்திலிருந்து ஜனுதிபதி மாளிகைவரை வீதியின் இரு மருங்கிலும் பல்லாயிரக்கணக்கில் திரண்டிருந்த மாணவர்களும் தொழிலாளர்களும் பொதுமக்களும் மகிழ்ச்சி பொங்க அதிபரை வரவேற்றனர்.

### சனிக்கிழமை ஆட்சிமன்றத்தில் விபரம்வெளியிடுவார்

ஜனுப் சதாத் வரும் சனிக்கிழமை தமது இஸ்ரேலிய விஜயம் பற்றிய சகல விபரங்களையும் எகிப்திய ஆட்சி மன்றத்தில் எடுத்து விளக்குவார் என்று கெய்ரோ செய்திகள் தெரிவிக்கின்றன.

### அமைச்சரவையில் மாற்றம்

இதே சமயம் ஜனுப் சதாத்தின் இஸ்ரேலிய விஜயத்தின் பிரதிபலிப்பாக எகிப்திய அமைச்சரவையில் மாற்றங்கள் நிகழலாம் என்று அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

### மக்கள் ஏமாற்றம்

ஜனுப் சதாத்தின் இஸ்ரேலிய விஜயத்திஞல் உடனடிப்

(5 ம் பக்கம் பார்க்க)

## 'ஹிட்லர்முசோலினிபோன்று இந்திரா ஆட்சி புரிந்தார்!"

புதுடில்லி, நவ. 22

முன்னுள் இந்தியப் பிரதமர் திருமதி காந்தி ஹிட்லர், முசோலினி போன்று சர்வாதிகார ஆட்சி நடத்திஞர்.

இவ்வாறு மத்திய உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங் பத்திரிகையாளர் மத்தியில் கூறிஞர்.

ஜெர்மன் தலைவரான ஹிட்லரும் இத்தாலியத் தலைவரான முசோலினியும் தங்கள் நாடுகள் உலக அரங்கில் பெரும் வல்லரசுகளாகத் திகழவேண்டுமென்ற பெரு விருப்பத்துடன் ஆட்சி புரிந்தார்கள். ஆனல் திருமதி காந்தி தமது குடும்ப ஆட்சி பரம்பரை பரம்பரையாக இருந்துவர வேண்டும் என்பதற்காகச் சர்வாதிகார ஆட்சி நடத்திவந்தார் என்றும் திரு. சரண்சிங் கூறிஞர். [இ]

# தமிழ்நாடு புயல் சேதம் 200 கோடி ரூபா!

தமிழ் நாட்டுக்கும், ஆந்திரப் பிரதேசத்துக்கும் மத்திய அரசு தலா ஐந்து கோடி ரூபாய் நிதி உதவி வழங்க முன்வந்திருக்கிறது.

## மொரார்ஜியிடம் எம்.ஜி.ஆர். நேரில் விளக்கம்

புதுடில்லி, நவ. 22

தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் இன்று பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயைச் சந்தித்து தமிழ்நாட்டின் புயல் சேதம்பற்றி விளக்கிஞர்.

மாநில அரசுக்கு அதிக அளவு பணம் தேவைப்படுகிறது என்று கூறிய முதலமைச்சர், சேதம் சம்பந்தமான முழு மதிப்பீடும் இன்னும் முடியவில்லை என்றும் தனியார், அரசு சொத்துக்களுக்கு 150 முதல் 200 கோடி ரூபாவரை சேதம் ஏற்பட்டிருக்கிறதென்றும் தெரிவித்தார்.

இதற்கிடையே புயல், வெள்ளத்திஞல் பாதிக்கப்பட்ட

## 113 ஆண்டுகளில் வீசாத பயங்கரச் சூறுவளி!

### ஆந்திராக்கடலில் நூற்றுக்கணக்கில் சடலங்கள் மிதக்கின்றன!!

ஹைதராபாத், நவ. 22

ஆந்திரப் பிரதேசத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களைப் பலி கொண்ட புயல் 113 ஆண்டுகளில் வீசாத பயங்கரச் சூறுவளி என்று வர்ணிக்கப்பட்டுள்ளது.

இந்த தேசியப் பேரழிவிஞல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சகல இந்திய மக்களும் உதவுவது அவர்களின் கடமை என்று ஆந்திர பிரதேச முதல்வர் திரு. வெங்கல்ராவ் தெரிவித்துள்ளார்.

நிவாரணப் பணிகள் மிகத் தீவிரமாக நடைபெற்றுவருகின்றன.

ஆந்திராக் கடலில் நூற்றுக்கணக்கான மனித சடலங்கள் மிதந்துகொண்டிருக்கின்றன என்றும் வெள்ளத்தில் நிற்கும் உயர்ந்த மரங்களில் பலர் தொங்கிய நிலையில் உயிருக்காகப் போராடிக்கொண்டிருக்கின்றனர் என்றும் விமான மூலம் நிவாரணப் பணிகளை மேற்கொண்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ)

## இந்திரா மீதான ஊழல்குற்றத்தை உடன் விசாரணைசெய்க

### தமது ஊழல்குற்றம்பற்றியும் பய் பிரஸ்தாபம்

புதுடில்லி, நவ. 22

முன்னுள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்திக்கும் அவரது குடும்பத்திற்கும், தமக்கும் தமது குடும்பத்திற்கும் எதிராகச் சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுக்களை உடன் விசாரணை செய்யுமாறு முன்னுள் அமைச்சர் திரு டி ஏ. பய் காங்கிரஸ் தலைவர் திரு. பிரமானந்தரெட்டியைக் கேட்டுள்ளார்.

ஊழல் குற்றம் புரிந்தவர்கள் காங்கிரஸ் கட்சியின் அங்கத்தவராகவோ, கட்சித் தலைமைப் பீடத்திலோ இருக்கக்கூடாது. ஆகவே இது குறித்து உடன் விசாரணை நடத்தி மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்றும் திரு. பய் காங்கிரஸ் தலைவரைக் கேட்டுள்ளார்.

திருமதி காந்தி அமைச்சரவையில் திரு. பய் தொழில் அமைச்சராக இருந்தார். (இ)

## "கண்ணீரை வரவழைத்த இந்திரா ஆட்சி"

புதுடில்லி, நவ 22

'திருமதி இந்திரா காந்தி அரசின் அதிகாரம் மக்களின் கண்ணீரைத் துடைப்பதற்குப் பதிலாக அவர்களுக்கு மேலும் கண்ணீரை வரவழைத்தது.' இவ்வாறு முன்னுள் தொழில் அமைச்சர் திரு டி ஏ. பய் நேற்று ஷா கமிஷன் முன் கூறிஞர். [இ]

## கிராமசேவகர்கள் நியமிக்கப்படுவர்

(கொழும்பு)

இந்த ஆண்டு முடிவுக்குள் 350 கிராம சேவகர்கள் புதிதாக நியமனம் பெற உள்ளனர்.

இத்தகவலை பிரதி பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சர் திரு. பேர்ஸிசமரவிர தெரிவித்தார். (இ)

# தமிழர் ஆளப்படும் இனமல்ல; சட்டரீதியில் நிரூபித்தார் 'திரு'

'ட்ரயல் அட்பார்' வழக்கில் தமிழினம் ஒரு ஆளப்படும் இனமல்ல சர்வதேச சட்டரீதியில் தங்களை ஆளும்உரிமையை அதாவது இறைமைச் சட்டரீதியில் திரும்பப் பெற்றுள்ளனர் என்றும் 'தமிழ் ஈழ எல்லைகள் புத்தளம் தொடக்கம் மன்னார்வரை வந்து, மன்னாரிலிருந்து கும்பகனையாவரை பரந்துள்ளதென்றும். தமிழ் மக்களின் சம்மதமின்றி அல்லது அவர்களை போரில் வென்ருலேயன்றி வேறு எவ்விதத்தாலும் தமிழ் மக்களை ஆளும் உரிமை எந்த அரசுக்கு இல்லை என்பதை ஆணித்தரமாக சரித்திர ரீதியிலும், சட்ட ரீதியிலும் அவர் எடுத்துரைத்தார்.

இப்படியாக அவர் எடுத்துரைத்தபொழுது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆட்சிஸ்திரமாக இருக்கின்றபடியினுல் அரசியல் சட்டம் செல்லுபடியாகும் என்ற சட்டமா அதிபரின் வாதம் அவர் நமது இறைமையை நாம்திரும்பபெற்றுள்ளோம் என்பதைநிரூபித்துவிட்டார் என்பதைக் காட்டுகின்றது.

## உகண்டா வழக்கின் தீர்ப்பு

இந்த நாட்டின் நீதிமன்றங்களிலும், அரசியல் சட்டத்தைப்பற்றி, ஆராய்ந்து தீர்ப்பளிக்க அதிகாரம் உண்டென வாதாடும்பொழுது எடுத்துக்காட்டிய சான்றுகள் அவரது தனிப்பட்ட கருத்தாகும். இந்த்ச் சமர்ப்பணங்களுக்குப் பின்பு லண்டனிலிருந்துவந்து கிடைத்த உகண்டா வழக்கின் தீர்ப்பில், அதேவிதமான வாதம் கையாளப்பட்டு நீதிமன்றத்திஞல் ஏற்கப்பட்டதைப்பார்க்கும்பொழுது அவர் ஒரு சட்டத்தை ஆக்கக்கூடிய அறிவு பெற்றிருந்தார் என விளக்கிக் காட்டுகிறது.

'ட்ரயல் அட்பார் வழக்குத் தொடங்கி சில நாட்களின் பின் டாக்டர் ஹாண்டி இவ்வழக்கை நடத்தவேண்டுமென்றும் அவரது உடல்நிலை ஏற்றதல்லவென்றும் ஆலோசனை கூறியிருந்தும், தமிழ் பேசும் மக்களின் உரிமையை மனதில் கொண்டு, தமது உயிரையே பணயம்வைத்து அவ்வழக்கை நடத்திஞர் அமரர் திரு. இதன் காரணமாகவே அவர் தனது ஆயுளைக் குறைக்கவேண்டியேற்பட்டதென்பதை தமிழ் மக்கள் அறிவர்.

## பண்டா-செல்வா ஒப்பந்தம்

அவர் சொலிசிற்றர் ஜெனரலாக பதவி வகித்த காலத்தில்தான் பண்டாரநாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தம் இடம்பெற்றது. அந்நாட்களில் தந்தை செல்வநாயகத்திற்கு அமரர் திருச்செல்வம் ஆலோசனை கூறிஞரென்பதை அறிந்த பிரதமர் பண்டாரநாயக்கா இது சம்பந்தமாக அவரைக் குற்றம்சாட்டி வினவிஞர்.

'நான் ஆலோசனை கூறியது உண்மை.'நான்அப்படி ஆலோசனை கூறியதில் என்ன பிழை?' என்று அமரர் திருச்செல்வம் பிரதமர் பண்டாரநாயக்காவிடம் கேட்டார். அவர் தமது உத்தியோகக் கட்டுப்பாட்டையும் மீறி தமிழ் மக்களுக்குச் சேவைசெய்யும் மனப்பான்மை கொண்டிருந்தார் என்பதையே எடுத்துக்காட்டுகிறது.

**ஆர். பாலசுப்பிரமணியம்**
**-- சட்டத்தரணி**

தந்தை செல்வா போன்று வடக்கு, கிழக்கு, மலை நாட்டு மக்கள் ஆகியோரின் நன்மதிப்பையும் அமரர் திரு. பெற்றிருந்தார்.

அமரர் திருச்செல்வம் மந்திரியாக கடமை ஏற்கும்வரை, எல்லாராலும் ஒதுக்கப்பட்டு வந்த ஒருஅமைச்சுஅவர் பதவி ஏற்றபின்பு, பலகோணங்களில் முன்னேற்றமடைந்து நிர்வாகத் திறமைபெற்றமையை அரச நிர்வாகிகள் அனைவரும் ஒப்புக்கொள்வர்.

சிங்கள மக்கள் மத்தியிலும் அவர் எல்லாரையும், சமனாக நடத்தும்நிர்வாகி என்ற நன்மதிப்பைப் பெற்றிருந்தார். அவருடைய காலத்தின்பின்பு தான், உள்ளூராட்சி அமைச்சு அதிகார பலம்வாய்ந்த அமைச்சாக கருதப்பட்டுவருகிறது.

## சிறுபான்மைத்தமிழர் குடியிருப்பு

சிறுபான்மைத் தமிழருக்கென ஒரு விடமைப்புத் திட்டத்தை அச்சுவேலியில் ஆரம்பித்து சிறுபான்மை தமிழ் மக்களை முன்னேற்றமடையச்செய்வதன்மூலமே தமிழ் மக்களை ஒரே சமுதாயமாக்கமுடியும் என்ற கருத்துடன் எப்போதும் சிறுபான்மைத் தமிழரை முன்னேற்றும் பணிக்கு முக்கிய இடம்கொடுத்திருந்தார்.

சைவத்தை வளர்க்கவேண்டும் என்ற ஆவல்கொண்டு தனிப்பட்ட முறையில் பல ஸ்தாபனங்களுக்கு வேண்டிய உதவிகளைச்செய்தார். வண்ணை வீரமாகளி அம்மன் கோவிலில் ஆண்டுதோறும் ஒரு 'சங்கிலியன் விழா' எடுக்கவேண்டும் என்ற எண்ணம் அவர் மனதில் இருந்தது. ஆனுல் அதை அவர் செயல்படுத்துவதற்கு முன்பு பிரிந்துவிட்டார்.

## ஒரே விதமான தமிழ்க்கலைச்சொல்

68-ம் ஆண்டு சென்னையில் நடந்த தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் தமிழ் கலைச்சொற்கள் அனைத்தும் உலகெங்கும் ஒன்ருக இருப்பதன்மூலமே ஓர் ஒன்றுபட்ட தமிழினத்தை உலகத்தில் ஆக்கலாம் என்ற கருத்தை அவர் முன்வைத்தார். இந்தியா இலங்கை மற்றும் தமிழர் வாழும் இடமெல்லாம் ஒரேவிதமான கலைச்சொற்களால் தமிழர்களை ஒன்றுபடுத்தமுடியும் என்ற கருத்தைத் தெரிவித்தார்.

இதனை தமிழ்பேசும் கல்விமான்கள் தங்கள் கவனத்திற்கு எடுப்பது நல்லது.

இவரது இழப்பால் தமிழ்மக்கள் ஒரு சட்டமேதையைமட்டுமல்ல மக்களை ஒன்றுபடுத்திய தலைவரை மட்டுமல்ல. தங்கள் இறைமையை தாங்கள் மீண்டுப்பெற்று இறைமையை தாங்களே உபயோகிக்கும் உரிமையைப் பெறும் நாளைத் தள்ளி வைத்துள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் அவர் என்ன கொள்கைக்காக வாழ்ந்தரோ, எந்த லட்சியத்திற்காக உயிரைப் பணயம் வைத்தாரோ அதை நாம் விளங்கிக்கொண்டு அவரது கனவை தமிழ்மக்கள் அரசுரிமையைப் பெறவேண்டுமென்'ற கனவை, நினைவாக்க தமிழ்மக்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து முயற்சிப்பதே அவருக்கு நாம் செய்யக்கூடிய கைமாருகும்.

(தொடரும்)

---

# 'பட்ஜட்' விவாதத்தில் வரலாறு படைத்த 'அமிர்'

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அரசாங்கத்தின் முதலாவது வரவுசெலவுத்திட்ட உரை மீதான விவாதம் தேசிய அரசுப் பேரவையில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

நிதிஅமைச்சர் திரு. ரொனி டி மெல் கடந்த 15ந் தேதி சமர்ப்பித்த இந்த வரவுசெலவுத்திட்ட உரை முந்திய நிதியமைச்சர்களின் வரவுசெலவுத்திட்ட உரைகளைவிட மாறுபட்டிருந்த அதேவேளை, வரவு செலவுத்திட்ட உரைமீதான விவாதத்தின் தொடக்கவுரையும் பலவிதங்களிலும் மாற்றத்தையும் முக்கியத்துவத்தையும் கொண்டிருந்தது.

வரவு செலவுத்திட்ட உரை மீதான விவாதத்தை எதிர்க்கட்சித் தலைவரே ஆரம்பித்து வைக்கின்ற சம்பிரதாய ரீதியில், இலங்கையின் பாராளுமன்ற அரசியல் வரலாற்றில் முதன் முதலாக தமிழர் ஒருவர்—தமிழில் இந்த விவாதத்தை ஆரம்பித்துப்பேசியிருக்கிருர்.

எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் இணைச் செயலதிபருமான திரு. அ. அமிர்தலிங்கம் இவ்விவாதத்தை ஆரம்பித்துப் பேசியதில் மாத்திரமல்ல அவரின் பேச்சின் 'அடக்கத்தி'லும் அதன் முக்கியத்துவமும் சிறப்பும் தங்கியிருந்தது.

## நீண்ட விவாதம்

சுதந்திர இலங்கையின் வரலாற்றில் மிகநீண்ட வரவு செலவுத்திட்ட உரை என்று வர்ணிக்கப்பட்ட நிதிஅமைச்சர் திரு. ரொனி டி மெல்லின் உரையை, அமைச்சர் சுமார் நாலரை மணித்தியாலங்கள் நிகழ்த்தியிருந்தார். அவ்வுரை மீதான விவாதத்தை கடந்த 18ந் தேதி ஆரம்பித்துப் பேசிய திரு. அமிர்தலிங்கமும் நீண்ட நேரம் சுமார் இரண்டரை மணிநேரம் உரைநிகழ்த்திஞர்.

முதலில் தமிழில் தமது பேச்சின் சாரம் முழுவதையும் கூறிவிட்ட பின்னர் ஆங்கிலத்தில் தனது உரையை அவர் நிகழ்த்திஞர்.

சாதுரியமான அரசியல் பாராளுமன்றப் பேச்சாளராகவே கணிக்கப்பட்ட திரு. அமிர்தலிங்கம் பொருளாதார துறையிலும் அன்றுநிகழ்த்திய விவாதம் பத்திரிகையாளர் உட்பட, பலராலும் வெகுவாக மெச்சப்பட்டது. மிகுந்த

**மாலி**

பாராட்டையும் அவர் பெற்ருர்.

அவர் ஆசிரியரையும் விஞ்சிஞரா? என்பதுகூட சிந்திக்கக் கூடியதே தான்!

## அனைவரும் மெச்சிய உரை

அரசுக்கு முற்றிலும் விரோதமான— நாட்டைத் துண்டு போடுகின்ற கொள்கையைக் கொண்டு— எதிர்க்கட்சியில் அமர்ந்திருக்கும் திரு. அமிர்தலிங்கம், அந்தக் கொள்கைகளுக்கு அப்பால்— 'எதிர்க்கட்சி என்பதால்' எதிர்க்கவேண்டும் என்ற நிலைக்கும் அப்பால்— நாட்டின் ஒன்றுபட்ட அபிவிருத்தி என்ற உன்னதமான பார்வையில் வரவுசெலவுத் திட்டத்தை நோக்கி, கண்டிக்கவேண்டியவற்றைக் கண்டித்து— வரவேற்கவேண்டியவற்றை வரவேற்றும்— வேண்டிய ஆலோசனைகளைக்கூறி மிகுந்த பொறுப்புணர்வோடு— நெஞ்சுக்கு நீதியாக வரவுசெலவுத்திட்டத்தை துலாபாரமிட்டதுதான் அனைவரையும்மெச்ச வைத்தது.

## சான்ருண்மையின் கௌரவிப்பு

இச்சபையில் நாம் அங்கம் வகிக்கும்காலம்வரை மற்றையவர்களைப் போலன்றி அரசாங்கம் நீதியான நேர்மையான நிர்வாகத்தை நடத்த எங்களால் முடிந்தவரை நாம் முயலுவோம், என்பதனையும் நான் இங்கு சொல்லிவைக்கவிரும்புகிறேன்' என்று திரு. அமிர்தலிங்கம் உணர்ச்சியோடு அழுத்தமாகக் கூறியபோது சபை நிசப்தமாகியது. அந்த நிசப்பத்தினிடையே சில கரங்கள் அரசு தரப்பிலிருந்து சான்ருண்மையின் கௌரவிப்பாக ஒலித்தன!

## தேசிய உடையுடன்

தேசிய உடையுடன் விசிறி மடிப்பிட்ட சால்வையைக்கரங்களால் சரிசெய்தபடி தமது பேச்சைப் போலவே கம்பீரமாகநின்று தமது உரையை நிகழ்த்திஞர் அமிர்.

## அரிசியும் அரசியலும்

இலங்கையின் அரசியலுக்கும் அரிசிக்குமுள்ள நெருக்கமான தொடர்பை சுதந்திர இலங்கையின் முதலாவது பொதுத்தேர்தலிலிருந்து எடுத்துக்கூறிய அவர், அரிசி வாக்குறுதியை அளித்தே அரசாங்கங்கள் ஆட்சிக்கு வந்ததனையும் அமோக ஆதரவைப் பெற்று வந்த அரசாங்கங்கள்கூட பின்னர் அரிசிமான்யம் என்ற பாறையில் மோதிச் சிதறியதையும் விளக்கமாகக் கூறிஞர்.

## ஐ. தே. க. தேர்தல் வாக்குறுதியை காப்பாற்றவில்லை

இதேவிதத்தில்தான் 117 ஆசனங்களைக் கைப்பற்றி ஆட்சிக்கு வந்த கடந்த அரசாங்கம் இன்று 9 பேருடன் விளங்குகிறது என்றும் சொன்னவர் இப்போது ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றியுள்ள ஐ. தே. க. இந்தப் பெருவெற்றிக்குக் காரணமான 'வாழ்க்கைச்செலவைக் குறைப்போம்; உணவைக் குறைந்தவிலையில் அளிப்போம்'—என்ற அதன் தேர்தல் வாக்குறுதியை இந்த வரவு செலவுத்திட்டத்தில் காப்பாற்றியதாக யாராவது கூறமுடியுமா? என்று கேட்டார்.

## இவர்கள் சீனிப் பங்கீட்டை இழக்கிருர்களே

'அமிர்' பங்கீட்டுச் சீனிபற்றிப் பேசிக்கொண்டிருந்த போது பிரதமர் குறுக்கிட்டு, 12 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளுக்கு பங்கீட்டு சீனி கிடைக்கும் என்றபோது; தந்தை ஒருவரின் வருமானம் 300 ரூபா ஆகிவிட்டால் அவரின் பிள்ளைகள் சீனிப் பங்கீட்டை இழக்கிருர்கள் என்பதனைப் பிரதமருக்குச் சுட்டிக் காட்டிஞர்.

## வடக்குக்கும் கிழக்குக்கும் வயிறு ஒன்றுதான்

திரு. அமிர்தலிங்கம் பேசிக்கொண்டிருந்தபோது, விவசாய காணி பிரதி அமைச்சர் திரு அப்துல் மஜீத் குறுக்கிட்டு "வடமாகாண மக்களுக்குக் கஷ்டம் என்பதற்காக நீங்கள் நெல்லின் உத்தரவாதவிலை அதிகரிப்பை எதிர்க்கிறீர்கள்; கிழக்கு மாகாண மக்களை மறந்துவிட்டீர்கள்" என்று சொல்லவும், திரு அமிர்தலிங்கம் அதையே பலமாக மறுத்துரைத்து, நான் உத்தரவாதவிலை அதிகரிப்பை வரவேற்கின்றேன், ஆனுல் நான் நுகர்வோரைப்பற்றித் தான் கூறிக்கொண்டிருக்கிறேன். வயிற்றைப்பொறுத்தவரையில் வடக்கு, கிழக்கு, தெற்கு மேற்கு, மத்தி எல்லாம் ஒன்று தான்என்பதைநாம் உணர்ந்து தானிருக்கிருேம் என்று கூறியதும் ஆழ்ந்து நோக்கத்தக்கதாகும்.

ஆங்கிலத்தில் அவர் தமது உரையை நிகழ்த்திக்கொண்டிருந்தபோது எழுந்த சில குறுக்கீடுகளுக்கு 'சூடாகவே' தமது பதிலை அளித்தார். சில வெளியிடப்படாத 'விடயங்களை' அரசாங்கம் வெளிப்படுத்தவும் செய்தார். [இ]

---

## யாழ் நகரில் நாளை ஐ. நா தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ஐக்கிய. நாடுகள் தினவிழா யாழ்ப்பாணம் றீம்பர் மண்டபத்தில் நாளை 24-ம் தேதி மாலை நடைபெறவிருக்கிறது.

யாழ். மாவட்ட அரசாங்கஅதிபர் திரு. டபிள்யூ. ஏ எல்விஜயபால தலைமையில் நடக்கும் இவ்விழாவில் ஐ நா. சபை பிரதிநிதி, வடமாநில கல்வி அதிபர் ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள்.

அண்மையில் யாழ். மத்திய கல்லூரியில் யாழ் லயன்ஸ் கழக ஆதரவில் நடைபெற்ற ஐ நா. பாதுகாப்புச் சபை மாதிரிக்கூட்டத்தில் கலந்து கொண்ட மாணவர்களுக்கும் லியோ கழக உறுப்பினர்களுக்கும் இவ்வைபவத்தில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

கதம்ப நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (க)

---

## முகாமையாளரை கட்டாய லீவில் அனுப்ப முடிவு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளரையும் கணக்குப் பகுதி உத்தியோகத்தர் ஒருவரையும் கட்டாய லீவில் அனுப்புவதென்று சங்க இயக்குநர் சபை தீர்மானித்துள்ளது.

சங்க உயர் அதிகாரிகள் சிலர் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் கிடைத்துள்ள புகார்மீது நடைபெற்ற விசாரணைகளை அடுத்தே இயக்குநர் சபை மேற்கண்டவாறு தீர்மானித்தது.

இயக்குநர் சபைத்தலைவரும் வலி மேற்கு உதவி அரசாங்க அதிபருமான திரு. சோ. அருணுசலம் தலைமையில் நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. மகாதேவாவும் கலந்து கொண்டார்.

ஊழல் மீதான விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. [இ]

# விளையாடாதீர் நெருப்புடன்

## அன்னை மணியம்மை தமிழக அரசுக்கு எச்சரிக்கை

சென்னை, நவ. 22

"நான் இறந்து விடுவேன் எனக் கருதியே, என்னைத் தமிழக அரசு விடுதலை செய்துள்ளது. நான் சிறையில் இறந்தால் அதன் விளைவுகளைத் தாங்கிக்கொள்ளும் சக்தி தமிழகஅரசுக்குக் கிடையாது. என் மீது இரக்கம் கொண்டு என்னை விடுதலை செய்யவில்லை. தமிழர் என்னும் பெருநெருப்புடன் விளையாட வேண்டாம் என நான் தமிழக அரசுக்கு எச்சரிக்கிறேன்."

இவ்வாறு விடுதலை செய்யப்பட்ட திராவிடக் கழகத் தலைவி அன்னை மணியம்மை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக திருமதி மணியம்மையார் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

"நான் சிறையில் வைக்கப்பட்ட சமயம், எனக்கு அடிக்கடி நெஞ்சழுத்தம், வலி,மயக்கம் கண்டது. இதனுல் திடீர் முடிவு ஏற்படலாம் எனசிறைச்சாலை வைத்தியர்கள் அரசுக்கு அறிவித்ததைத் தொடர்ந்து பயத்தினுலேயே என்னை விடுதலை செய்தனர். திருமதி இந்திரா காந்தியின் அரசு திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணை எவ்வாறு பொது மக்களுக்குப் பயந்து விடுதலை செய்ததோ அதைப்போல தமிழக அரசும் என்னை விடுதலை செய்துள்ளது. இதில் எந்த இரக்கமோ கருணையோ இல்லை."

(கெ-இ)

## நாச்சிமார் கோவிலில் மகாலட்சுமி பூசை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம், திருவண்ணை குளக்கரை மருதடி காமாட்சி அம்மன் கோவிலில் மஹாலட்சுமி பூஜையும் சுமங்கலிப் பிரார்த்தனையும் இம்மாதம் 25-ந் திகதி வெள்ளிக்கிழமை நிகழவிருக்கிறது.

அன்றைய தினம விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று மகாலட்சுமிக்கு விசேஷ தீபபூஜையும் சுமங்கலிப் பிரார்த்தனையும் நடைபெறும். [கா-அ]

......

## நாடு...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பலன் எதுவும் கிடைக்கும் என எதிர்பார்த்திருந்த எகிப்திய மக்கள் தற்போது பெரிதும் ஏமாற்றம் அடைந்துள்ளனர் என லண்டன் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது. (இ)

## வயோதிபத் தம்பதிகளுக்கு பலத்த அடிகாயம்!

(நெல்லியடி)

வயோதிபர் ஒருவரும் வயோதிபப் பெண்ணும் பலத்த அடிகாயங்களுடன் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்த கணபதி செல்லன் (வயது 50) சிவலை லட்சுமி (வயது 60) ஆகிய இருவரும் வல்வெட்டித்துறை சமரபாகு என்ற இடத்தைச் சேர்ந்தவர்கள்.

க செல்லனைக் காயப்படுத்தியதாக சந்தேகத்தின்பேரில் கிட்டினன் கிச்சையனும் கிட்டினன் குலமும் பொலிசாரால் தேடப்பட்டு வருகின்றனர். லட்சுமியைக் காயப்படுத்தியதாகச் சந்தேகத்தின்பேரில், கணபதி செல்லனும் சந்திரன் மாம்பலமும் பொலிசாரால் தேடப்பட்டுவருகின்றனர்.

ஆஸ்பத்திரி பொலிஸ் உத்தியோகத்தர் திரு. வி. சிவசிதம்பரம் இவர்களின் வாக்கு மூலங்களைப் பதிவுசெய்துள்ளார்.

வல்வெட்டித்துறைப் பொலிஸார் இச்சம்பவம்பற்றி விசாரணைசெய்து வருகின்றனர்.

(கி-அ)

## வருடாந்த நவநாள்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி புனித பிரான்சிஸ் சவேரியாரின் வருடாந்த நவநாள் விழா இம்மாத 25-ம் தேதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி டிசம்பர் 3-ம்திகதி காலை திவ்விய பூசைப்பலியும் திருச்சொருபப்பவனியுடனும் முடிவடையும்.

தினமும் மாலை 5மணிக்கு ஆராதனையும் பூசைப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும். (ஃ)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

கோப்பாய் தெற்கு (1) சின்னதுரை அமிர்தலிங்கமும்
(2) பெண் கமலாதேவியும்

இல ஈடு 12288 — வழக்காளிகள்

எதிராக

கோப்பாய் தெற்கு (1) ஞானம் செல்லத்துரையும்
[2] பெண் பூரணமும்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் ஈடு 12288-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1977-ம் வருடம் மார்கழி மாதம் 2-ம் திகதி (2-12-77) முற்பகல் 10-30 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை முதல் வட்டி ரூ 2085/- இன்னும் ரூ. 1500/-க்கு 2-2-71 தொடக்கம் 24-2-72 வரைக்கும் 12 வீத வட்டியும் அதன் மேல் முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூ. 408-16. இதில் ரூ. 2000/- கொடுபட்டுள்ளது.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோவிற்பற்று கோப்பாய் தெற்கிலுறை கள்ளியவத்தை நில பரப்பு 5 இதில் வடக்குப் பக்கமாக நில பரப்பு 3 கிணறும் மற்றும் பயிர்வகைகளும். இந்தப்பரப்பு மூன்றுக்கும் எல்லைகிழக்கு நடேசதத்ஷரம் மைம்பெண் சின்னுச்சியினுதனம் வடக்கு ஒழுங்கையும் மேற்கு செல்லத்துரை பெண் இரசினுவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் தெற்கு ஜோஸப் அந்தோனிப்பிள்ளைக்கும் பெண் இராசம்மாவுக்குமுரியவாதனம் இதடங்கலும்.

செ. விசாகரெத்தினம்
விற்பனவு ஆணையாளர்

133 பருத்தித்துறை ரோட்
நல்லூர், யாழ்ப்பாணம்.
14-10-77

7745

Regal (Jaffna)
French Film Festival
Daily at 4-45 7 & 9-30 P. M. only
COUSIN COUSINE

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர். சரோஜாதேவி
நடித்த
தாயைக் காத்த தனயன்
(புதிய பிரதி)

6-வது வெற்றி வாரம்!
ராஜா யாழ்நகர்
தினசரி 10-30, 2-15, 6-15, 9-45
கே.எஸ்.கோபாலகிருஷ்ணனின் அற்புதப் படைப்பு!
ஜெமினி, ஜெயசித்திரா கே. ஆர். விஜயா
நடித்த
தசாவதாரம்
(கலர்)
(கண்ணபிரானின் பத்து அவதாரங்கள்)
[பாடசாலை மாணவர்கள் முன்கூட்டியே ஆசனங்களைப் பதிவுசெய்துகொள்ளலாம்]

மனோஹரா (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன்-ஜெமினி கணேசன்
சுப்பையா - லக்ஷ்மி - நிர்மலா
நடிக்கும்
சுஜாதாவின்
உனக்காக நான்
(ஈஸ்ட்மன் கலர்)

கடைசி வாரம்
ராணி (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
முத்துராமன் - நாகேஷ் - சச்சு
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30 9-30
தேவரின்
பெண் தெய்வம்

வெலிங்டன் (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
துணிவே துணை

லிடோ (யாழ்.நகர்)
எம். ஜி. ஆர். — லதா நடித்த
போன்; 7693
நீதிக்கு தலைவணங்கு

றியோ (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30.
ஷம்மிகபூர்
புரொபஸர்
(PROFESSOR) (Hindi)
(Color)

நாகம்ஸ் (சுன்னுகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு பி. ப. 2-30
ஜெமினி - வைஜெந்திமாலா
பார்த்திபன் கனவு

4-வது வாரம்
வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர்.
உலகம் சுற்றும் வாலிபன்
(கலர்)

புலோலி சினிமாஸ் (பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-30
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்-லதா
உழைக்கும் கரங்கள்

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச் சித்திரம்
★ கமலஹாசன் ★ ரஜனிகாந்த்
★ எம். எஸ். விஸ்வநாத் ★ ஸ்ரீதேவி
★ ஒய். விஜயா அநுபாமா
R. M. S. புரொடக்ஷன்ஸ் அளிக்கும்
மூன்று முடிச்சு
திரைக்கதை, வசனம், டைரக்ஷன் கே. பாலசந்தர்.

சாந்தி (யாழ். நகர்)
ஹற் திருநாள் திரையிடுகிறது
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
திலிப்குமார், வைஜயந் மாலா
போன்: 7642 டெப்சிராணி, யொனிவோக்கர்.......
பாட்டாளியின்சபதம் [தமிழ்] புதிய பிரதி

**மணிவாக்கு**

பாபத்தைப் பெரிது என்றும்; சிறிது என்றும் பாகுபடுத்தலாமென்று எண்ணும் பிழையை யாம் ஒருபோதும்விடப்படாது.
—காந்திமகான்

ஈழநாடு
The Eelanaadu

## பதுக்கலும் கொள்ளை இலாபமும்

பொருள்களைப் பதுக்கி வைப்போர்மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன விலைக் கட்டுப்பாட்டு இலாகாவினரையும் பொலிசாரையும் கேட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

எந்த அரசாங்கம் ஆட்சிபீடத்துக்கு வந்தாலும் பதுக்கல், கொள்ளை இலாபம் என்பது இந்தநாட்டில் சில பிரிவினரில் இரத்தத்துடன் ஊறிப்போன ஒரு அம்சமாகவே போய்விட்டது.

வரவு-செலவுத் திட்டத்தை நிதிஅமைச்சர் தேசிய அரசப்பேரவையில் சமர்ப்பித்துப் பேசியபோது பொருள்களைப் பதுக்குவோருக்கும், கொள்ளை இலாபம் அடிப்போருக்கும் எதிராகவும் தாம் ஏற்ற நடவடிக்கைகளை எடுத்திருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

என்றாலும் பதுக்கல், கொள்ளை இலாபம் ஆகியவைகளில் ஈடுபடுவோர் நிதி அமைச்சரைவிட இந்தத் துறையில் ஊறித்திளைத்த அனுபவசாலிகள் என்றே சொல்லவேண்டும்.

வரவு-செலவுத் திட்டத்தில் எந்தப்பொருளின் விலையும் அதிகரிக்கப்பட்டால் அது அடுத்த நிமிஷமே நாட்டின் எந்த மூலையிலுமுள்ள சிறிய கடையில்கூட அமுலுக்கு வந்துவிடும். ஆனால் எந்தப்பொருளின் விலையாவது குறைக்கப்பட்டால் அது அமுலுக்கு வருவதற்குப்பெரும் தயக்கமேற்படும். இதுதவிர விலை குறைக்கப்பட்ட பொருள்கள் திடீரென்று எங்காவது மூலையில் பதுங்கிவிடுவதும் வழக்கம்.

பங்கீட்டுக்கு அப்பாற்பட்ட ஒரு இருத்தல் சீனியின் விலையை நிதி அமைச்சர் தமது வரவு-செலவுத் திட்டத்தில் ஐந்து ரூபாயிலிருந்து மூன்று ரூபாயாகக் குறைப்பதாக அறிவித்தார். புதிய விலையும் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

ஐந்து ரூபாயாகத் தட்டுப்பாடில்லாமல் கிடைத்த சீனி திடீரென்று மறைந்துவிட்டது.

இதே போன்றுதான் மற்றும் பல பொருள்களின் நிலையும்.

இந்த அரசாங்கம் தனியார் துறையினருக்கு சலுகையும், உரிமையும் அளித்துள்ளபோதிலும் கூட பதுக்கலும் கொள்ளை இலாபமும் இன்னமும் ஒழிந்துபோக மறுப்பதேன்,

இதன் விளைவாகத்தான் பொருள்களைப் பதுக்குவோருக்கும், கொள்ளை இலாபம் அடிப்போருக்கும் எதிராகக் கடும்நடவடிக்கை எடுக்கும்படியும் பதுக்கிவைக்கப்பட்டுள்ள பொருள்களைக்கண்டுபிடித்து அந்தந்த இடத்திலேயே கட்டுப்பாட்டு விலைக்குப் பொதுமக்களுக்கு விநியோகிக்கும்படியும் விலைக் கட்டுப்பாட்டுப் பிரிவினரையும் பொலிசாரையும் பிரதமர் கேட்டிருக்கிறார்.

இவ்வித நடவடிக்கை ஓரளவாவது நல்ல பயனைத் தருமென்று எதிர்பார்க்கலாம். ஆனாலும் இந்த நடவடிக்கைகளிலும் மோசடி நடைபெறாமல் பார்த்துக் கொள்ளவேண்டியது அவசியமாகும். இதற்கு முன் இப்படியான சந்தர்ப்பங்களில் வேலியே பயிரை மேய்ந்த நிகழ்ச்சிகளும் நடந்துள்ளதை மக்கள் நன்கறிவார்கள்.

# இ.போ.ச. பஸ் சாரதி நடத்துநரை கோஷ்டி ஒன்று தாக்கியது

## பிரயாணிகளை ஏற்க மறுத்தனராம்

[யாழ்ப்பாணம்]

பிரயாணிகள் சிலரை ஏற்றிச் செல்ல மறுத்த பஸ் சாரதியும், கண்டக்டரும் இளைஞர் கோஷ்டியொன்றினால் தாக்கப்பட்ட சம்பவம் ஒன்று பளையில் நடந்துள்ளது.

யாழ்ப்பாணம் நோக்கி வந்த பஸ்ஸில், இடவசதி இல்லாததினால், சில பிரயாணிகள் ஏறமுடியாமல் போய்விட்டது.

இந்த பஸ் பளையை வந்தடைந்ததும், காரில்வந்த ஒரு இளைஞர் கோஷ்டி சாரதியையும் கண்டக்டரையும் தாக்கியதாக கூறப்படுகிறது.

பஸ்நிலையத்திற்கு வந்த பொலிசாரிடம் இளைஞர் ஒருவர் சிக்கிக்கொண்டார். இளைஞரிடம் பெற்ற தகவலைத் தொடர்ந்து பொலிசார் மற்றும் இளைஞர்களைத் தேடி வருகின்றனர்.

சின்னக்கடையில் 3 இளைஞர்கள், மற்றொரு பஸ்ஸில் ஏறமுற்பட்டபோது ஏற்பட்ட வாக்குவாதத்தைத்தொடர்ந்து கண்டக்டர் தாக்கப்பட்டார்.

பஸ்ஸில் இடமில்லாததினால் இளைஞர்களை ஏற்ற கண்டக்டர் மறுத்தபோதே இச் சம்பவம் நடந்ததாக கூறப்படுகிறது.

இதுசம்பந்தமாக கண்டக்டர். யாழ்ப்பாணம் பொலிசில் புகார்செய்துள்ளார்.

## யாழ். லயன்ஸ் கழக நத்தார் சித்திரப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் லயன்ஸ் கழகம் பாடசாலை மாணவர்களிடையே நத்தார் வாழ்த்துச் சித்திரப் போட்டியொன்றை நடாத்த உள்ளது.

போட்டியில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் தமது 'நத்தார் வாழ்த்துச் சித்திரங்களை' 3½ அங்குலம் 2½ அங்குலம் மடிக்கப்பட்ட தாளில் விரும்பிய வர்ணத்தில் தீட்டி, பிரவேசக் கட்டணமாக ஒரு ரூபா தபாற் கட்டளையுடன் அனுப்பவேண்டும்.

போட்டி முடிவுத் திகதி 10-12-77 ஆகும்.

முதல் மூன்று சிறந்த நத்தார்ச் சித்திரங்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும்.

ஒரு மாணவர் எத்தனை சித்திரங்களையும் அனுப்பலாம்.

ஒவ்வொரு சித்திரத்துடனும் ஒரு ரூபா தபாற்கட்டளை இணைத்து அனுப்பப்படவேண்டும்.

இப்போட்டிச் சித்திரங்களைக் கொண்ட கண்காட்சியும் விற்பனையும் டிசம்பர் மாதம் 17ந் திகதி சனிக்கிழமை நடைபெறும்.

போட்டி விண்ணப்பங்கள் காரியதரிசி, யாழ் லயன்ஸ் கழகம், மே/பா சிலோன் மோர்ச்சன்ஸ் லிமிட்டட், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படவேண்டும்.

இப்போட்டி மூலம் கிடைக்கும் பணம் யாழ் லயன்ஸ் கழகச் சமூகசேவைகளுக்குப் பயன்படுத்தப்படும்'' என்று போட்டி அமைப்பாளர் தெரிவித்தார். (இ)

## சோதிடர் நவரத்தினத்திற்கு அமெரிக்கா அழைப்பு

[யாழ்ப்பாணம்]



யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையைச் சேர்ந்த சோதிடர் பண்டிதர் திரு. கே. என். நவரத்தினத்துக்கு அமெரிக்காவின் ரெக்சாஸ் நகரிலிருந்து அழைப்பு வந்திருக்கிறது.

''வெற்றிக்குத் திறவுகோல்' என்னும் எண்கணிதச் சோதிட நூலின் வெளியீட்டுவிழா அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் விமரிசையாக நடைபெறவிருப்பதால் இவ்விழாவில் பங்குபற்றுமாறும் பல்கலைக்கழகங்கள், டெலிவிஷன், வானொலி முதலியவற்றின் மூலம் உரை நிகழ்த்துமாறும் பல மாநிலங்களுக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

கடந்த பல வருடங்களாக ஆஸ்திரேலியா, அமெரிக்கா, ஆபிரிக்கா, கனடா, ஐரோப்பா போன்ற பல நாடுகளின் முதல்வர்களுக்கு இந்து சோதிட முறைப்படி விளக்கங்கள் கொடுத்து, நம் நாட்டுக்கும் சோதிடக் கலைக்கும் பெருமை தேடித்தந்த இவரது நூலை, ரெக்சாஸ் மாகாணத்தில் வாழும் பிரபல புத்தக வெளியீட்டாளரும், சோதிட விற்பன்னருமாகிய திரு. ஐவன் கிசாற் தந்தி மூலம் பாராட்டிப் புத்தக வெளியீட்டுவிழாவில் பங்குகொள்ளுமாறு அழைத்துள்ளார்கள்.

இந்நூலில், மேல்நாட்டு எண்கணித சோதிடத்துக்கு இந்து சோதிடத் தத்துவம் கொடுத்ததுமின்றி, மேல்நாட்டுச் சோதிடத்துடன் ஒப்பிட்டு இந்து சோதிடத்தின் தனித்துவத்தையும் விளக்கியுள்ளார் நூற்றாண்டு காலமாக விளங்கிவரும் எண்ணின் கிரக முறைகளைத் தர்க்கரீதியாக ஆராய்ந்து மாற்றியமைத்ததுமன்றி, பல்வேறு நுணுக்கமான ஆராய்ச்சிகளைப் புது விதமாகவும் இந்நூலில் விளக்கியுள்ளார். எண், ஒலி, எழுத்துக்கள் முதலியவற்றால் மக்களுக்கேற்படும் மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் தெளிவாக விளக்கியுள்ளதுடன் இதற்காக உலகில் பிரசித்திபெற்ற பல்வேறு மனிதர்களின் வாழ்க்கையை உதாரணங்களாக எடுத்துக்காட்டி நிரூபித்துள்ளார்.

இதுவரையும் மெக்சிக்கன், அல்பேட்டா, லண்டன், நியூயேசி, வியன்ன போன்ற நகரங்களில் இவரின் உபநிலையங்கள் விளங்கிவந்தன. தற்பொழுது ரெக்சாஸ் தலைநகரில், ஐவன் பிரசுரத்தாரின் அலுவலகத்தில், நிலையான அலுவலகம் ஒன்று திறக்கப்படவுள்ளது. ஐக்கிய அமெரிக்காவில் ஐம்பது மாகாணத் தலைவர்களினதும், கவர்னர்களினதும் சோதிட ஆலோசகராக இவர் விளங்குவார்.

## பதுக்கல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் முயற்சிக்கின்றனர் என்றும், பொருள்களைப் பதுக்கி வைப்பதன் மூலம், கொள்ளை லாபம்பெற இவர்கள்முயற்சிப்பதாகவும் கிடைக்கப்பெற்ற புகார்கள்மீது பிரதமர் உடனடி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

**லைசென்ஸுகள் ரத்தாகும்!**

அரிசி, சீனி, மாவு, புடவை மற்றும் பொருள்களைப் பதுக்கிவைத்தால் அல்லது கூடியவிலைக்குவிற்றால் உடனடி நடவடிக்கைமேற்கொண்டு, அந்த வர்த்தகர்களின் 'லைசன்ஸுகளை' ரத்துச்செய்யும்படி பிரதமர் பணித்துள்ளார்!

பொருள்களின் விலைகளைக் குறிக்கும் பட்டியலை ஒவ்வொரு வர்த்தகரும் தமது கடையில், பொதுமக்கள் பார்வைக்கு வைக்கவேண்டும் என்றும், இவ் விஷயத்தில் கடுமையாக இருக்குமாறும் பிரதமர் கேட்டுள்ளார்.

**இன்று முதல்**

இதுசம்பந்தமான உடனடி

உத்தரவுகளை விலைக்கட்டுப்பாட்டு இலாகாவுக்கும், பொலிஸ் மா அதிபருக்கும் பிரதமர் நேற்று அனுப்பிவைத்தார். இன்றுமுதல் பொலிசாரும் விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளும்; பதுக்கல் கொள்ளை லாப வர்த்தகர்கள் மீது தீவிர கண்காணிப்பை மேற்கொள்வார்கள். மீறுவோர்மீது உடனடி கடும் நடவடிக்கை எடுக்கப்படும். (ம)

## மூன்றுதடவை திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சின்னக் கடைப்பகுதியில் திருடர்கள் கோஷ்டியின் நடமாட்டம் அதிகரித்து தினமும் களவுகள் நடைபெறுகின்றன.

இப்பகுதியிலுள்ள இறைச்சிக்கடை ஒன்று மூன்று தடவைகள் உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருட்கள் களவாடப்பட்டுள்ளன. இக் கடைக்கு முன்னாலுள்ள சைக்கிள்கடையும் உடைக்கப்பட்டு திருட்டுநடைபெற்றுள்ளது.

இத்திருட்டுக் கோஷ்டியைப் பிடிப்பதில் யாழ் குற்றத்தடுப்பு பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர். (செ)

## இன்று

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன வெளிக்கள உத்தியோகத்தர் சங்க யாழ் கிளையின் பொதுக்கூட்டம் இன்று காலை தலைவர் திரு.வி.ஞானசேகரம் தலைமையில் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள சங்கக் காரியாலத்தில் நடைபெறவிருக்கிறது.

## ரூபா 300...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போது சில திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

ஐக்கியதேசியக் கட்சியின் கொள்கைக்கு அமையவே புதிய வரவுசெலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

பொதுசனத்தொடர்பு சாதனங்கள் பற்றித் தெரிவிக்கையில் திரு மெல், பொதுசனத் தொடர்பு சாதனங்களான வானொலி, பத்திரிகை ஆகியவை தமது கருத்துக்களைத் தெரிவிக்கப் பூரணசுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. எனவே அவை தமது பொறுப்பை உணர்ந்து தேசநலனுக்கு உதவும் பணிகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

''நெல்லின்'' உத்தரவாத விலையை அதிகரித்தது குறித்து திரு. மெல் கருத்துத் தெரிவிக்கையில், இந்த விலை அதிகரிப்பினால் 50 லட்சம் விவசாயிகள் நன்மைபெறுவதுடன் நெல்உற்பத்தியும் அதிகரிக்கும் என்று கூறினார். (ம)

## மரண அறிவித்தல்

### நல்லதம்பி கனகசுந்தரம்

(S. N. K. சுந்தரம்)

யாழ்ப்பாணம் 33 தேவாலய வீதியைச் சேர்ந்தவரும், மலேசிய வர்த்தகரும், புங்குடுதீவு மேற்கைச் சேர்ந்தவருமான நல்லதம்பி கனகசுந்தரம் மலேசியாவில் காலமானார். இவர் மீனாட்சியின் அன்புக் கணவரும், திருமதி செல்வராணி மகாலிங்கம், சுகந்தமலர், சுந்தரமோகன், சுந்தரபவானி, சுந்தரரூபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மகாலிங்கம் (இலங்கை மின்சார சபை கொழும்பு) அன்பு மாமனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும்.

## மரண அறிவித்தல்

### திருமதி லூசி நேசம்மா

திருமதி லூசி நேசம்மா தர்மரத்தினம் காலமாகிவிட்டார். இவர் காலம்சென்ற தருமரத்தினம் (Inspector of Schools) அவர்களின் அன்பு மனைவியும் R. J. D. அரியரத்தினம் (கல்விக்கந்தோர் நிருவாக அதிகாரி) புஸ்பரத்தினம் இரத்தினசிங்கம் (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி) D. A. மாசிலாமணி, A. D. துரைரத்தினம் அவர்களின் அருமைத் தாயாருமாவார். பிரேதசேம ஆராதனை 23-11-77 புதன்கிழமை (இன்று) பி. ப. 3-00 மணிக்கு உடுப்பிட்டியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வெலிங்டன் மேலவீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka